FTJ

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2022

**10** - ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

### பகுதி - I

I **சரியான விடையைத் தேர்வு செய்யவும்.** 1 X 7 = 7

1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?

அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின்

2. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?

அ) கவாசாகி ஆ) இன்னோசிமா இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி

3. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் ................ .

அ) எவரெஸ்ட் ஆ) ஆனைமுடி இ) கொடைக்கானல் ஈ) ஊட்டி

4. இந்தியாவின் தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது .......... .

அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை

5. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசர நிலையை அறிவிக்க முடியும்?

அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356 இ) சட்டப்பிரிவு 360 ஈ) சட்டப்பிரிவு 368

6. லோக்சபா தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது .............. .

அ) 18 வயது ஆ) 21 வயது இ) 25 வயது ஈ) 30 வயது

7. இந்திய அரசாங்கத்தில் 1991 - இல் ............... அறிமுகப்படுத்தப்பட்டது

அ) உலகமயமாக்கல் ஆ) உலக வர்த்தக அமைப்பு

இ) புதிய பொருளாதார கொள்கை ஈ) இவற்றில் எதுவுமில்லை

### பகுதி - II

II **குறுகிய விடையளி. (5 மட்டும்) வினா எண். 14 கட்டாய வினா.** 5 X 2 = 10

8. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
9. பொருளாதார பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?
10. இலட்சத் தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.
11. காலநிலையை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.
12. இந்திய வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக.
13. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை பட்டியலிடுக.
14. உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக.

## பகுதி - III

**விரிவான விடையளி. (5 மட்டும்) வினா எண். 22 க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

**கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 X 5 = 25

15. அ) டானென்பர்க் போரில் .............. பேரிழப்புகளுக்கு உள்ளானது.

ஆ) நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை ............ என அழைக்கப்பட்டது.

இ) அமெரிக்க பங்கு சந்தையில் முதல் பெரும் வீழ்ச்சி ஏற்பட்ட நாள் .............. .

ஈ) ............ கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

உ) 1940 இல் ராஜினமா செய்த பிரிட்டன் பிரதமர் ............ ஆவார்.

16. இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை ஆய்வு செய்க.

17. தென்மேற்கு பருவகாற்று குறித்து எழுதுக.

18. *வேறுபடுத்துக.*

1) மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்

2) வானிலை மற்றும் காலநிலை

*காரணம் கூறு.*

1) இமயமலைகள் மடிப்பு மலைகள் என ஏன் அழைக்கப்படுகின்றன?

19. இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?

20. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துகளை விவரி.

21. 1910 முதல் 1930 வரை உள்ள உலக நிகழ்வுகள் ஐந்தினை காலக்கோட்டில் குறிக்கவும்.

22. ***உலக வரைபடத்தில் குறிக்கவும்.***

1) கிரேட் பிரிட்டன் 2) ஹிரோஷிமா 3) இத்தாலி

4) ரஷ்யா 5) ஆஸ்திரேலியா

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 2 X 4 = 8

23. பன்னாட்டு சங்கத்தின் தோல்விக்கான காரணங்களை குறிப்பிடுக.

*(அல்லது)*

ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.

24. **இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**

1) தென்மேற்கு பருவகாற்று வீசும் திசை 2) தக்காண பீடபூமி

3) கிழக்கு தொடர்ச்சி மலை 4) காரகோரம் *(அல்லது)*

1) இமயமலை 2) ஆரவல்லி மலைத்தொடர்

3) அந்தமான் நிக்கோபார் தீவு 4) பாமீர் முடிச்சி